# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.6 |
| பெயர் | நியாசுதீன் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 18th day of February 2026.

(**1** வது அக்ரம் ஜிந்தா, **2** வதுஎதிரி சதாம் உசேன் என்கிற சதாம், **3** ஆம் எதிரி சம்சுதீன் என்கிற சம்சு என்கிற கூளை சம்சு **4** வது எதிரி அனு என்கிற அன்சாத், **5** ஆம் எதிரி ஜாபர் அலி என்கிற ஜாபர், **6** ஆம் எதிரி அப்துல் முனாப் என்கிற முனப் எதிரிகள் ஆஜர். )

முதல் விசாரணை

நான் தற்பொழுது நெ.14, ராயல் நகர், கரும்புகடை, கோயமுத்தூரில் வசித்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவ காலத்திலும் நான் அதே விலாசத்தில்தான் குடியிருந்து வந்தேன். நான் இரும்பு வியாபாரம் செய்து வருகிறேன். 2012 ல் மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள சந்திரா ஹோண்டா கடையில் இருசக்கர வாகனம் வாங்கினேன். அதன் பதிவு எண்.டி.என்.37-ஏ.எக்ஸ்.3069 ஆகும். மேற்சொன்ன இருசக்கர வாகனத்தை ஜாபர் அலிக்கு 2015 ல் ரூ.25,000/-த்திற்கு விற்றேன். ஆர்.சி புத்தகத்தையும் கொடுத்தேன். ஆனால் பெயர் மாற்றவில்லை. 17-03-2017 ஆம் தேதி பாரூக் என்பவர் கொலை செய்யப்பட்ட விவரத்தை செய்தி தாள்களின் மூலமாக தெரிந்து கொண்டேன்.

கடந்த 06-04-2017 ல் பி.1 காவல் நிலைய ஆய்வாளர் என்னை விசாரிக்க அழைத்தார். அப்பொழுது எனது இருசக்கர வாகனம் இந்த வழக்கில் தொடர்புடையதாக என்னிடம் கூறினார். அதற்கு நான் 2015 ல் ஜாபர் அலியிடம் விற்று விட்டேன் என்றும். ஆனால் அவர் பெயர் மாற்றாமல் வைத்துள்ளார் என்று கூறினேன். சாட்சி நீதிமன்றத்தில் ஆஜரில் இருக்கும் ஜாபர் அலியை அடையாளம் காண்பித்தார். அவரிடம் விற்ற வாகனத்தையும் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்று கூறினார். மேலே குறிப்பிட்ட பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனமானது தற்போது இந்த கட்டிடத்தின் தரை தளத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. அதை சாட்சி சரியாக அடையாளம் காண்பித்தார். அந்த வண்டி சா**.**பொ**.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை பி.1 காவல் நிலையத்தார் விசாரித்தார்கள், பின்னர் சி.பி.சி.ஐ டி போலீசாரும் விசாரித்தார்கள்.

**5** ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னை விசாரிப்பதற்காக காவல் நிலையத்திலிருந்து எழுத்துபூர்வமாக அழைப்பாணை எதுவும் கொடுக்கவில்லை. அதேபோன்று சி.பி.சி.ஐ.டி டிஸ்பியும் விசாரிப்பதற்கு முன்பு எனக்கு எழுத்துபூர்வமான அழைப்பாணை எதுவும் அனுப்பவில்லை. பி.1 காவல் நிலையத்தில் என்னை சுமார் 11 மணி அளவில் விசாரிப்பதற்காக அழைத்தார்கள். பி.1 காவல் நிலையத்தில் சுமார் 1 மணி நேரம் இருந்திருப்பேன். என்னை விசாரித்து எழுதி கொண்டு அதை டைப் செய்து என்னிடம் படித்து காண்பித்தார்கள். நான் இரும்பு வியாபாரம் செய்து வருகிறேன் என்று கூறுவதற்கு ஆதாரமாக நான் ஆவணங்கள் எதையும் விசாரணையின்பொழுது கொடுக்கவில்லை. பி.1 காவல் நிலையத்தார் என்னை விசாரித்து பதிவு செய்து கொண்ட வாக்குமூலத்தை சி.பி.சி.ஐ.டி போலீசார்

என்னிடம் காண்பிக்கவில்லை. இருசக்கர வாகனத்தை நான் வாங்கும் பொழுது அதற்குரிய ரசீது, ஆர்.சி. புத்தகம் கொடுத்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் வாகனத்தை ஜாபர் அலியிடம் விற்று விட்டதாக எழுத்துபூர்வமாக இன்சூரென்ஸ் நிறுவனத்திடமோ, ஆர்.டி.ஓ அலுவலகத்திற்கோ நான் தன்னிச்சையாக தெரிவிக்கவில்லை. நம்பிக்கையில்தான் நான் ஜாபரிடம் விற்றேன். 2012 லிருந்து 2017 வரை நான் கோயமுத்தூரில்தான் இருந்தேன் என்று சொன்னால் சரிதான். 2015-2017 காலகட்டத்தில் நான் ஜாபர் அலியை நான் இடையில் பார்த்திருக்கிறேன். எத்தனை முறை பார்த்திருப்பேன் என்று எனக்கு தற்போது நினைவில்லை. ஆனால் வண்டியின் பெயர் மாற்றத்தை செய்யுமாறு அவரிடம் கேட்டேன். மார்க்கெட் வளாகத்தில் வைத்துதான் ஜாபர் அலியை பார்த்தேன். நான் பலமுறை ஜாபரிடம் தனது பெயருக்கு வண்டியை பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டேன். பி.1 காவல் நிலையத்தார் என்னை விசாரிக்கும்பொழுதும், சி.பி.சி.ஐ.டி போலீசார் என்னை விசாரித்தபோதும் பெயர் மாற்றம் செய்யுமாறு நான் ஜாபரிடம் கூறியதை கூறினேன். அதை பி.1 காவல் நிலையத்தார் பதிவு செய்து கொண்டார்கள். சி.பி.சி.ஐ.டி போலீசாரும் அதை பதிவு செய்திருந்தார்கள். போலீசாரிடம் மூன்று முறை பெயர் மாற்றம் செய்யுமாறு ஜாபர் அலியிடம் சொன்னதாக நான் கூறியுள்ளேன். பெயர் மாற்றம் செய்து கொள்ளுமாறு ஜாபர் அலிக்கு கடிதம் மூலம் எந்த வேண்டுகோளும் நான் வைக்கவில்லை. பைக்கை நான்தான் வாங்கினேன் என்று காட்டுவதற்கு ஆதாரமாக ஆவணம் எதையும் நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை. நான் கூறியதுபோல் ஜாபர் அலிக்கு நான் எனது வாகனத்தை கொடுக்கவில்லை என்றும், பெயரை மாற்றி கொள்ளுமாறு நான் கேட்டுக் கொண்டதில்லை என்றும் சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கும்வரை முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள வண்டி எனது

பெயரில்தான் இருந்தது. நான் ஜாபர் அலியிடம் இருசக்கர வாகனத்தை விற்ற விவரம் மார்க்கெட்டில் இருக்கும் இப்ராஹிம், சர்ஜா, சித்திக் ஆகியோர்களுக்கு தெரியும். ஆனால் அந்த விவரத்தை போலீசாரும் என்னிடம் கேட்கவில்லை, நானும் போலீசாரிடம் சொல்லவில்லை. வாகனம் என்னுடையதுதான் என்றும், ஆனால் போலீசார் கேட்டுக் கொண்டதால் அதை ஜாபர் அலிக்கு விற்று விட்டதாக தவறான தகவலை நீதிமன்றத்தில் கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1,3** மற்றும் **6** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

**1,3,6** எதிரிகளின் தரப்பில் **5** ஆம் எதிரியின் குறுக்கு விசாரணையை முற்றிலுமாக ஏற்றுக் கொள்கிறார்கள்**.**

**2** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

**2** மற்றும் **4** எதிரிகளின் தரப்பில் **5** ஆம் எதிரியின் குறுக்கு விசாரணையை முற்றிலுமாக ஏற்றுக் கொள்கிறார்கள்**.**

மறு விசாரணை இல்லை

ஒம்**/**நியாசுதீன்**,**

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.7 |
| பெயர் | சசிகுமார் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | சண்முகசுந்தரம் | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 18th day of February 2026.

(**1** வது அக்ரம் ஜிந்தா, **2** வதுஎதிரி சதாம் உசேன் என்கிற சதாம், **3** ஆம் எதிரி சம்சுதீன் என்கிற சம்சு என்கிற கூளை சம்சு **4** வது எதிரி அனு என்கிற அன்சாத், **5** ஆம் எதிரி ஜாபர் அலி என்கிற ஜாபர், **6** ஆம் எதிரி அப்துல் முனாப் என்கிற முனப் எதிரிகள் ஆஜர். )

முதல் விசாரணை

நான் தற்போது 21 பிளாக் 655, வெள்ளலூர் ஹவுசிங்யூனிட், கோயமுத்தூர் என்ற விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2017 ஆம் ஆண்டில் இ.8, ராம்லட்சுமண் நகர், பீளமேடு, கோயமுத்தூரில் வசித்து வந்தேன். நான் 2017 ல் கால்டாக்ஸி ஓட்டி வந்தேன். அந்த காலகட்டத்தில் நான் டி.என்.37- சி.ஜே. 8532 என்ற பல்சர் வாகனம் வைத்திருந்தேன். எனது தம்பிக்கு வாடகை ஆட்டோ எடுத்து கொடுக்க அன்சாரி என்பவரிடம் ரூ.15,000/- பணம் கேட்டேன். அதற்கு ஈடாக எனது இருசக்கர வாகனத்தை கேட்டார். அதனால் அவரிடம் கொடுத்தேன். அவர் சதாம் என்பவருக்கு போன் செய்து பணத்தை கொண்டுவருமாறு கூறினார். பின்னர் சதாம் ரூ.15,000/- பணம் எடுத்து வந்தார். அதை அன்சாரியிடம் கொடுத்தார்.

ரூ.1000/- கமிஷனாக அன்சாரி எடுத்து கொண்டு மீதி ரூ.14,000/- என்னிடம் கொடுத்தார். மார்க்கெட்டில் அடமானம் வைத்து பணம் பெறுவதற்கு பிட்டிங் என்று அழைப்பார்கள். 06-04-2017 ல் எனது வீட்டிற்கு விசாரணைக்கு என்று பி.1 போலீசார் வந்தார்கள். வந்த போலீசார் பரூக் என்பவர் கொலை வழக்கில் சதாம் அந்த வாகனத்தை பயன்படுத்தினார் என்று கூறி என்னை விசாரித்து வாக்குமூலத்தை பதிவு செய்து கொண்டார். மேலே குறிப்பிட்ட இருசக்கர வாகனத்தின் ஆர்.சி. புத்தகம் என்னிடம்தான் உள்ளது. பின்னர் 23-04-2017 அன்று சி.பி.சி.ஐ.டி போலீசார் என்னை விசாரித்தார்கள். சாட்சி நீதிமன்றத்தில் ஆஜரில் இருக்கும் சதாமை சரியாக அடையாளம் காண்பித்தார். எனது இருசக்கர வாகனத்தை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். தற்பொழுது நீதிமன்றத்திற்கு கீழே நிறுத்தப்பட்டிருக்கும் மேலே குறிப்பிட்ட வாகனத்தை சாட்சி சரியாக அடையாளம் காட்டினார். அது சா**.**பொ**.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**5** ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

பி**.1** போலீசாரோ**,** சி**.**பி**.**சி**.**ஐ**.**டி போலீசாரோ எனக்கு அழைப்பாணை எதுவும் கொடுக்கவில்லை**.** எனக்கு பி**.1** காவல் நிலைய போலீசாருடனோ**,** அல்லது சி**.**பி**.**சி**.**ஐ**.**டி போலீசாருடனோ இந்த வழக்கிற்கு முன்பு எந்த தொடர்பும் இல்லை**.** நானாக சென்று இந்த வழக்கில் சாட்சியாக இருக்கிறேன் என்று எந்த போலீசாரிடமும் நான் கூறவில்லை**.** நான் சொந்த வண்டி வைத்துதான் கால்டாக்ஸி தொழில் செய்து வந்தேன்**.** எனது கார் விவரத்தையோ**,** அதன் பதிவு எண் பற்றியோ நான் போலீசார் என்னை விசாரித்தபோது கூறவில்லை**.** எனது கார் சம்மந்தப்பட்ட ஆவணம் எதையும் நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை**.** சம்பவ காலத்தில் கால்டாக்ஸி ஓட்டி வந்தேன் என்று காட்டுவதற்கு ஆதாரம் எதையும்

போலீசாரிடம் கொடுக்கவில்லை. கால்டாக்ஸி ஓட்டுனர்கள் சங்கம் என்று கோயமுத்தூரில் உள்ளது. நான் எந்த சங்கத்திலும் அங்கத்தினராக இல்லை. எனது பெயரை சசீதரன் என்று நீங்கள் கூறினால் நான் அதை ஏற்று கொள்ளமாட்டேன். கோயமுத்தூரில் இருசக்கர வாகனம் வைத்து பைனான்ஸ் தொழில் செய்யும் நிறுவனங்கள் நிறைய உள்ளன. ஆனால் அவ்வாறான நிறுவனங்களிடம் நான் கடன் கேட்கவில்லை, காரணம் எனது இருசக்கர வாகனத்தை நான் பைனான்ஸ் மூலமாகத்தான் வாங்கினேன். மாதாமாதம் சரியாக தொகையும் செலுத்தி வந்தேன். நான் கற்பகம் பைனான்ஸ் மூலம் இருசக்கர வாகனத்தை வாங்கினேன். ரூ.45,000/- பெற்றேன். அதனால் இருசக்கர வாகனத்திற்குண்டான அனைத்து ஆவணங்களும் கற்பகம் பைனான்ஸில்தான் இருந்தது. போலீசார் நான் கூறிய வாக்குமூலத்தை டைப் செய்து என்னிடம் படித்து காண்பித்தார்கள். இன்று நீதிமன்றத்தில் அடையாளம் காட்டிய நபரை ஏற்கனவே ஊடகங்கள் வாயிலாக நான் பார்க்கவில்லை. நான் வாகனத்தை கொடுக்கும்பொழுது **ரூ.15,000/-** கொடுத்தது சதாம் இல்லை என்றும், அது வேறு ஒரு நபர் என்றும் சொன்னால் சரியல்ல. சசிகுமார் என்ற பெயரும், சசீதரன் என்ற பெயரும் வெவ்வேறானது. பொதுவாக அன்சாரி என்ற பெயரும், அன்சாத் என்ற பெயரும் வெவ்வேறானது என்று சொன்னால் சரிதான். போலீசார் விசாரணையின்பொழுது அன்சாத் என்ற பெயரை நான் கூறவில்லை, அன்சாரி என்றுதான் கூறினேன். நான் கொடுத்த வாக்குமூலத்தில் அன்சாத் என்ற பெயர் இடம் பெற்றிருந்ததா என்றால் நான் அவசரத்தில் படித்ததால் எனக்கு தெரியவில்லை. ஏற்கனவே அடமானத்தில் இருக்கும் ஒரு வாகனத்தை மீண்டும் அடமானம் வைக்க முடியாது என்ற விவரம் எனக்கு தெரியும். வாகனத்தின் ஆவணம் இல்லாமல் யாரும் பணம் கொடுக்க மாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. பிட்டிங் வைக்கும்பொழுது

ஆவணங்களை கொடுத்து பிட்டிங்கிற்குண்டான ஆவணத்தையும் ஏற்படுத்தியிருக்கவேண்டும் என்று சொன்னால் சரிதான், ஆனால் அவர்கள் கொடுக்கவில்லை. போலீசாரின் வேண்டுகோளுக்கிணங்க நான் அன்சாரியிடம் வாகனத்தை கொடுத்ததாகவும், அதற்கு சதாம் பணம் கொடுத்தார் என்றும் வழக்கிற்காக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. இன்றைய தினம் எதிரி சதாமை போலீசார் என்னிடம் நீதிமன்றத்திற்கு வெளியே அடையாளம் காட்டி அதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே பி.**1** காவல் நிலையத்தார் விசாரித்த பின்பு மீண்டும் நீங்கள் ஏன் விசாரிக்கிறீர்கள் என்று சி.பி.சி.ஐ.டி போலீசாரிடம் நான் கேட்கவில்லை. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சாட்சியங்கள் தவறானது என்று சொன்னால் சரியல்ல.

<u>**1,3** மற்றும் **6** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**1,3,6** எதிரிகளின் தரப்பில் **5** ஆம் எதிரியின் குறுக்கு விசாரணையை முற்றிலுமாக ஏற்றுக் கொள்கிறார்கள்.

<u>**2** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**2** மற்றும் **4** எதிரிகளின் தரப்பில் **5** ஆம் எதிரியின் குறுக்கு விசாரணையை முற்றிலுமாக ஏற்றுக் கொள்கிறார்கள்.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/சசிகுமார்,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.